DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 164/2019** |
| Deposition of Witness for | : PW1 |
| Name | : மாலதி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 25.06.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 25 June 2026.

**A1 died. A2, A3 எதிரிஆஜர் . வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தேனியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். 2017 ம் வருடம் ஒரு நாள் மாலை 4.30 மணிக்கு நான் வீட்டில் இருந்துகொண்டிருந்தபோது, எதிரிகள் 3 பேரும் சேர்ந்து எங்கள் வீட்டிற்குள் வந்து என்னை பார்த்து எதிரி மூர்த்தி தேவடியா என்ற அசிங்கமான கெட்ட வார்த்தை பேசி உனக்கு என்ன உரிமை இருக்கிறது என்று கேட்டு 2, 3 எதிரிகள் என்னைபிடித்து கொண்டார்கள். 1 ம் எதிரி முள் கம்பை வைத்து வயிறு, இரண்டு கால்களிலும் உடம்பு முழுவது அடித்து காயம் ஏற்படுத்தினார். நீ இருக்கனும்னா ஒழுங்க இரு, என்று 1–ம் எதிரி

மிரட்டினார். 2–ம் எதிரி 1–ம் எதிரியிடம் என்னை கொல்லாமல் விடாதீர்கள் என்று சொல்லி மிரட்டினார். 3–ம் எதிரி 2–ம் எதிரியிடம் என்னை பிடித்து அடிக்கச்சொன்னார். இது சம்மந்தமாக உடனடியாக சங்கரன்கோவில் தாலுாக காவல் நிலையம் சென்று பின்னர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்தேன். அப்போது போலிசார் நான் சொன்னதை எழுதினார்கள் . அப்போது தான் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். எனது அக்கா சுதா அத்தான் முருகன் மேற்படி சம்பவத்தை பார்த்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்..

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1–வது எதிரி மூர்த்தியின் மனைவி தான் 2–வது எதிரி என்றால் சரிதான். 1–வது எதிரி மூர்த்தியின் மகன் தான் 3–வது எதிரி என்றால் சரிதான். எனது குடியிருப்பு வீடும் எதிரிகளின் வீடும் அடுத்து அடுத்து என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன , நேரம், சம்பவயிடம் எதிரிகள் தாக்கியதால் எனக்கு உடம்பில் ஏற்பட்ட காயம் அனைத்தையும் போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் காயம்பட்ட உடன் நேரடியாக காவல் நிலையம் சென்று மருத்துவ நமுனா பெற்று சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த போது சங்கரன்கோவில் தாலுாக காவல் நிலைய காவலர் என்னிடம் வாக்குமூலம் வாங்கினாாகள் அதிர்தான் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் கையொப்பமிட்ட மருத்துவமனையில் கொடுத்த வாக்குமூலம் தான் அ.சா.ஆ.1 ஆகும் என்றால் சரிதான். மருத்துவர் எப்படி காயம் ஏற்பட்டது எத்தனை நபர்கள்

அடித்தார்கள் என்று கேட்டு எழுதினாரா என்றால் சரிதான். நான் மருத்துவரிடம் தெரிந்த ஆண்நபர்கள் 3 பேர் ஒரு பெண் நபர் தாக்கி காயப்படுத்தினார்கள் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் விசாரணையில் எனக்கு காயம் எத்தனை நபர்களால் ஏற்பட்டது என்று சொன்னேன் என்றால் 4 நபர்களால் காயம் ஏற்பட்டது என சொன்னேன். நான் மருத்துவரிடம் எனக்கு வயிறு மற்றும் இடது பக்க பிட்டியில் காயம் ஏற்ட்டதாக, இரண்டு கால்களில் காயம் ஏற்பட்டதாக சொன்னேனா என்றால் சரிதான். உடம்பு முழுவதும் காயம் ஏற்பட்டதாக போலிசாரிடம் சொன்னேனா என்றால் சரிதான்.இந்த சம்பவம் நடைபெற்ற போது மல்லிகா என்பவரும் உடன் இருந்தாக போலிசார் விசாணையைல் சொன்னேனா என்றால் சரிதான். நான் போலிசார் விசாணையில் 2, 3 எதிரிகள் என்னை கம்பால் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக கூறினேன் என்றால் சரிதான். எனக்கு வயிறு மற்றும் இடது பக்க பிட்டியில் காயம் ஏற்ட்டதாக, இரண்டு கால்களில் காயம் பட்டதை தவிர வேறு காயம் இருந்ததாக போலிசார் விசாணையில் கூறினேனா என்றால் கூறினேன். நான் காவல் நிலையம் சென்றவுடன் காவல்துறையினர் என்னை மருத்துவமனைக்கு செல்லுமாறு சொல்லி உடனே அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட விரோதம் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. அ.சா.2-ன் வீடு எங்கள் தெருவில் இல்லை அடுத்த தெருவில் உள்ளது என்றால் சரிதான். அ.சா.2-க்கு சண்டைநடப்பது சம்மந்தமாக ஊரில் உள்ள நபர்கள் சொல்லித்தான் வந்தார்கள் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மருதையா தேவர் மற்றும் சந்தனபாண்டியன் வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தென்புறம் மூக்கையாத்தேவர், பாண்டித்தேவர் மற்றம் முத்துகுமார் ஆகியோர்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். அக்கம்பக்கத்தில் உள்ள

நபர்களுக்கு சம்பவம் தெரியுமா என்றால் தெரியும். போலிசார் விசாரிக்கும் போது அக்கம்பக்கத்தில் குடியிருக்கும் நபர்கள் சம்பவத்தை பார்த்ததாக சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவத்தில் இருந்ததாக சொல்லக்கூடிய மல்லிகா என்பவர் 2–வது எதிரியின் சகோதரரின் மனைவி என்றால் சரிதான். மல்லிகா என்பவருக்கம் எனக்கும் தனிப்பட்ட விரோதம் உள்ளதா என்றால் இல்லை. அன்றைய தினம் எனக்கு உடலில் பார்த்தால் தெரியக்கூடிய வெளிக்காயமோ, இரத்தகாயமோ இல்லை என்றால் என் உடம்பு முழுவதும் இரத்தகாயம் இருந்தது. குறிப்பாக எனக்க அன்றைய தினம் எந்த எந்த இடத்தில் இரத்தகாயம் இருந்தது என்றால் இடுப்புக்கிற்கு கீழ் காலிலும், வயிற்றிலும் இரத்தகாயம் இருந்தது. நான் சொல்வது போன்று அன்றைய தினம் எந்தவிதமான வெளிக்காயமோ, இரத்தகாயமோ மருத்துவர் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மருத்துவரிடம் நான் வலி இருப்பதாக கூறி சிகிச்சைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த வெளிக்காயமும் இல்லாமல் வலி மட்டும இருப்பதாக மருத்துவரிடம் கூறியதால் எனக்கு சிகிச்சையளித்த மருத்துவர் என்னை புறநோயளியாக பாவித்து உடனடியாக வீட்டிற்கு அனுப்பிவைத்தார் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவமனையில் எத்தனை நாள் இருந்தேன் என்றால் ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தேன். இந்த வழக்கிற்கு முன்பு நான் என் கணவரை விட்டு பிரிந்து நீண்டகாலம் தணியாக வாழ்ந்து வந்தேன் என்றால் சரிதான். எனக்கும் என் கணவருக்கும் பிரச்சினை ஏற்பட்டதற்கு காரணம் இந்த எதிரிகள் தான் என விரோதம் கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையம் சென்ற போது அங்கு வைத்து ஏதேனும் கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கவில்லை. நான் முதல் விசாணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

எதிரிகள் மீதுகொண்ட விரோதத்தின் அடிப்படையில் நடக்காத சம்பவத்திற்கு பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் கொடுத்த வழக்கு சம்மந்தமாக அக்கம்பக்கதில் குடியிருக்கும் நபர்களை விசாரணை செய்தால் அவர்கள் உண்மையை கூறிவிடுவார்கள் என்பதற்காக என்னை போலிசார் விசாரித்தபோது அக்கம்பக்கத்தினர் சம்பவத்தை பார்த்ததாக கூறிவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு பொய் வழக்கு என்பதால்தான் என்னை தாக்கிய நபர்கள் எத்தனை நபர்கள் என்பது குறித்து மருத்துவரிடம் ஒருவிதமாகவும், போலிசாரிடம் ஒருவிதமாகவும் முன்னுக்குப்பின் முரனாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. முன் விசாணையில் கூறியுங்ளதுபோல் எதிரிகள் யாரும் எனக்கு எதிராக எந்த குற்றச்செயலிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் காவல் நிலையம் சென்றதாகவும், பின்பு மருத்துவமனைக்கு சென்றதாகவும், கூறுவது உண்மை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது சகோதரி(அ.சா.2) என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் சரிதான். நான் கொடுத்த பொய் புகாருக்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அதளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் துறையினர் என்னிடம் மருத்துவமனையில் வைத்து பெற்ற வாக்குமூலம் இந்தவழக்கிற்கு விரோதமாக இருப்பதால் மறைக்கப்பட்டு உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.